தேதி - 29.10.2025.

**Pro**.**OP**.15/2024

**Pw**.2 - திரு. **G**.**Ramesh**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் அனுசரிக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

நான் 12 ம் வகுப்பு படித்து டிகோப் படித்துள்ளேன். எனது நிரூபணவாக்குமூலம் நான் சொல்லி வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. உயில் எழுதிகொடுத்தவரின் பெயர் ராமச்சந்திரன் என்ற ராமச்சந்திர கென்னடி ஆகும். ராமச்சந்திர கென்னடி உயில் எழுதுவது சம்பந்தமாக முதல் நாள் வந்து அழைத்தபோது யார் பெயருக்கு உயில் எழுத வேண்டும் என்று சொன்னாரா என்று கேட்டால் யார் பெயருக்கு எழுத வேண்டும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. உயில் 04.03.2007 ம் தேதி எழுதப்பட்டது. அன்று தான் பதிவு செய்யப்பட்டது. 04.03.2007 அன்று காலை 9 மணியளவில் வாடிப்பட்டியிலிருந்து யார் யார் உயிலை பதிவு செய்ய காரில் மதுரைக்கு போனது என்று கேட்டால் நான், என் மாமா ராமச்சந்திர கென்னடி மற்றும் வெங்கிடசுப்பிரமணியன் போனோம். வெங்கிடசுப்பிரமணியன் என் தம்பியா என்று கேட்டால் அவர் என் தம்பி இல்லை. அதற்கு முன் வெங்கிடசுப்பிரமணியனை பார்த்துள்ளேனா என்று கேட்டால் பார்த்துள்ளேன். அவர் எனக்கு தெரியும். அவர் பக்கத்து ஊருக்காரர். காரில் வரும்போது யார் பெயருக்கு உயில் எழுதபோவதாக ராமச்சந்திர கென்னடி சொன்னாரா என்று கேட்டால் அப்போதும் யார் பெயருக்கு எழுதபோவதாக சொல்லவில்லை. மதுரை வடக்கு மாவட்ட பதிவு அலுவலகம் எங்கு உள்ளது என்று கேட்டால் அது மதுரை வருமான வரி அலுவலகம் அருகே உள்ளது. பத்திர அலுவலகத்திற்கு வந்தபோது மணி காலை சுமார் 10, 10.30 மணி இருக்கும். அதன்பின் டாக்குமெண்ட் ரைட்டரை அவரது அலுவலகத்திற்கு பார்க்க போனோம். டாக்குமெண்ட்

ரைட்டர் பெயர் மணி என நினைக்கிறேன். டாக்குமெண்ட் ரைட்டர் அலுவலகத்தில் மனுதாரர் காந்தி இருந்தாரா என்று கேட்டால் அவர் அங்கு இல்லை. தீர்ப்பாணை நகல் எதையும் ராமச்சந்திர கென்னடி பத்திர எழுத்தரிடம் கொடுத்தாரா என்று கேட்டால் அதுபற்றி எனக்கு தெரியாது.

ராமச்சந்திர கென்னடி என் முன்னிலையில் எந்த நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது என்று பத்திர எழுத்தரிடம் சொன்னாரா என்று கேட்டால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் பத்திர அலுவலகத்திற்கு போவதற்கு முன் ராமச்சந்திர கென்னடி பத்திர அலுவலரிடம் உயில் எழுதுவது பற்றி விவரம் எதுவும் சொன்னதாக எனக்கு தெரிய வந்ததா என்று கேட்டால் பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு போனபோது நடந்த விபரம் தான் தெரியும். எந்த ஊரில் கண்ட எந்த சர்வே எண்ணில் கண்ட சொத்தை பொருத்து உயில் எழுத ராமச்சந்திர கென்னடி பத்திர எழுத்தரிடம் சொன்னார் என்று கேட்டால் தனக்கு கிடைக்கப்பெற்ற சொத்துக்களை பொருத்து எழுத சொன்னார். எதன் மூலம் தனக்கு சொத்துக்கள் கிடைக்கப்பெற்றதாக ராமச்சந்திர கென்னடி சொன்னார் என்று கேட்டால் நீதிமன்றம் மூலம் கிடைத்ததாக சொன்னார். எந்த நீதிமன்றம், எந்த வழக்கு என்று எனக்கு தெரியாது. பத்திர எழுத்தர் அலுவலகத்தில் ராமச்சந்திர கென்னடி பத்திரம் எழுத தகவல் சொன்னபோது நானும் அங்கு உடன் இருந்தேன். அப்போலோ மருத்துவமனையில் ராமச்சந்திர கென்னடி சிகிச்சை பெற்ற விபரம் தெரியுமா என்று கேட்டால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர் என்னிடம் வரும்போது நல்ல திடகார்த்தமாக இருந்தார். உயிலில் ராமச்சந்திர கென்னடி கையெழுத்து போடுவதற்கு முன் படித்து காண்பித்தார்கள். பத்திரம் யார் பெயரில் வாங்கப்பட்டது என்று கேட்டால் காந்தி பெயரில் வாங்கப்பட்டது. எவ்வளவு ரூபாய்க்கு பத்திரம் வாங்கப்பட்டது என ஞாபகம் இல்லை. மேற்படி உயில் காந்தி பெயரில் வாங்கப்பட்ட பத்திரத்தில் தான் டைப் செய்யப்பட்டதா என்று கேட்டால் பத்திரம் மற்றும் கான்கர் பேப்பரில் டைப் செய்யப்பட்டது.

ராமச்சந்திர கென்னடி எங்கு வைத்து உயிலில் கையெழுத்து போட்டார் என்று கேட்டால் பத்திரம் எழுதப்பட்ட அலுவலகத்தில் வைத்து கையெழுத்து போட்டார். ராமச்சந்திர கென்னடி முத்திரை தாள் மற்றும் கான்கர் பேப்பரில் தட்டச்சு செய்யப்பட்ட உயிலில் கையெழுத்து செய்தார். அதற்கு பின் முதல் சாட்சியாக நான் கையெழுத்து செய்தேன். சாட்சி பின்னிட்டு பத்திரத்தில் எழுதியதாக தனக்கு ஞாபகம் இல்லை என்றும், கான்கர் பேப்பரில் உயில் எழுதப்பட்டது என்றும் சாட்சியம் அளிக்கிறார். உயிலை பதிவு அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டபோது மணி என்ன இருக்கும் என்று கேட்டால் பகல் 12.30 மணி முதல் 1.00 மணி இருக்கும். மனுதாரர் SV காந்தியை எனக்கு தெரியும். அவர் என் சொந்தக்காரர். உயிலை தவிர வேறு ஆவணத்திலும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேனா என்று கேட்டால் வேறு ஆவணத்திலும் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். நான் மனுதாரரின் அழைத்தன் பேரில் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. நான் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையானவை அல்ல என்றும், மனுதாரர் அழைத்தன் பேரில் அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றும் சொன்னால் அது சரியல்ல.

Sd/- G.Ramesh

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN

Digitally signed by MUTHUKUMARAN
Date: 2025.10.28 18:06:39 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.